**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 267/2020** **P.W.1**

Deposition of witness for solemnly affirmed byTmt.S.Sangeetha, Assistant of this court on 02.03.2026 in accordance with the provision of the Act 1873.

| | | |
|---|---|---|
| Name | : | முருகேசன் |
| Father Name: | : | கிருஷ்ணம்பிள்ளை |

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.10 அ பதிவேடு மற்றும் புலவரைபடத்தை ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1960ம் வருடத்திய கிணற்றை பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றது அதனால் தற்போதுதான் தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டும்தான் பரிகாரம் கேட்டுள்ளேன், 4ம் பிரதிவாதிக்கு எதிராக கேட்கவில்லை என்றால் சரிதான். எனது பிராதில் 1 முதல் 3 பிரதிவாதிகள்தான் எனக்கு மின்இணைப்பு தரவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ச.எண்.7/5 நிலத்தில் எனக்கு எவ்வளவு பாகம் உள்ளது என்றால் மொத்த விஸ்தீரணம் 8 செண்ட் அதில் எனக்கு 5 பாகம் உள்ளது. வழக்கு பிராதில் உள்ள விவரங்கள் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் சரிதான். எனது பிராதில் 2 வது பக்கம் 3 வது பத்தியில் 19 வது வரியில் தாவா சொத்தான ச.எண்.7/5ல், 7 1/2 செண்ட் நிலத்தில் வாதிக்கு 1/8 பங்கு பாத்தியப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிராதுபடி 1/8 பங்குதான் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எதற்காக 4ம் பிரதிவாதியை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், எனது நிலத்திற்கு மின்இணைப்பு தரக்கூடாது என்று 4ம் பிரதிவாதி ஆட்சேபணை கடிதம் கொடுத்ததால் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன். மேற்படி ஆட்சேபணை கடிதத்தை யாரிடம் கொடுத்துள்ளார் என்றால் 4ம் பிரதிவாதி அவரது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளார். 4ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் எனக்கு மின்இணைப்பு தரக்கூடாது என்று ஆட்சேபணை கடிதம் கொடுத்துள்ளாரா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்துப் பார்க்கவில்லை. இன்றுவரை படித்துப்பார்க்கவில்லை.

4ம் பிரதிவாதி தனது பதிலுரையில் தாவா கிணறு தங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளது சரியல்ல. 4ம் பிரதிவாதியின் பதிலுரையை பற்றி வழக்கறிஞர் என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். 4ம் பிரதிவாதி தாவா கிணறு முழுவதும் தனக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் குறிப்பிட்டு பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதனைப் பொறுத்து நான் விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

இவ்வழக்கை எனக்காக மட்டும் தன்னிச்சையாக நடத்துகிறேனா அல்லது வேறு நபர்களுக்கும் சேர்த்து நடத்துகிறேனா என்றால் ராமசாமி, சண்முகம், நடராஜன் ஆகியோர்கள் எனது சகோதரர்கள் அவர்களுக்காகவும் எனக்காகவும் சேர்த்து நடத்துகிறேன். எனது சகோதரர்களுக்கும் தாவா கிணற்றில் பங்கு உள்ளதா என்றால் பங்கு உள்ளது. எனது பிராதிலோ அல்லது பிரமாணப்பத்திரிக்கையிலோ எனக்கும், எனது சகோதரர்களுக்கும் சேர்த்து வழக்கு நடத்துகிறேன் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கில் எனது சகோதரர்களுக்கும் தாவா கிணற்றில் எவ்வளவு பங்கு உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வழக்கு பிராதில் எந்த இடத்தில் நான் எனது சகோதரர்களுக்கும் பங்கு உள்ளது என்றும் மேற்படியார்களுக்கும் சேர்த்து நான் முன்னின்று வழக்கு நடத்துவதாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை ஆனால் கூட்டுப்பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

எனது பிராதிலோ அல்லது பிரமாணப்பத்திரிக்கையிலோ எந்த இடத்திலும் 4ம் பிரதிவாதியிடம் மின்இணைப்பு வேண்டும் என்று கேட்டுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் 4ம் பிரதிவாதியை பொறுத்து வழக்குமூலம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். 4ம் பிரதிவாதியிடம் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை, 4ம் பிரதிாவதிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. 4ம் பிரதிவாதியை

பொறுத்து எவ்வித வழக்குமூலமும், பரிகாரமும் கேட்காததால் 4ம் பிரதிவாதியை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

(4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

**Sd/-E.Ridhula** **Sd/Murugesan**
**DM,SDM**